**வாக்குமூலம்**
**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி**
**எஸ்.டி.சி.எண்.2680/22**
**வழக்கு சாட்சி – அ.சா.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | குமரேசன் | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | ராமதாஸ் | தொழில் | கிராமநிர்வாக அலுவலர் |
| கிராமம் | ஊஞ்சாம்பட்டி | சமயம் | |
| தாலுக்கா | தேனி | வயது | 48 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.06.2024

**( எதிரி ஆஜர். )**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் தற்போது தப்புகுண்டு , தாடிச்சேரி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 7.4.19 ம் தேதி அல்லிநகரம் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்த போது நானும், எனது கிராம உதவியாளர் ராஜமாணிக்கம் என்பவரும் தேனி டூ மதுரை சாலையில் உள்ள தேனி மேரி மாதா மெட்ரிகுலேசன் மேல்நிலைப்பள்ளிக்கு சென்றிருந்தோம். அப்போது அரசு ஊழியர்கள் தங்களது வாக்குகளை பதிவு செய்வதற்கு மேற்படி பள்ளிக்குவ ந்துக்கொண்டிருந்த போது அரசு ஊழியர்களிடம் காங்கிரஸ் கட்சிக்காரர்கள் 100 மீ எல்லை கோட்டிற்கு உட்புறமாக வந்து தங்களது கட்சிக்கு ஆதரவாக அரசு ஊழியரிடம்வாக்கு சேகரித்தனர். மேற்படி நபர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கும் படி 10.4.19 அன்று தேனி காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நான் கொடுத்த புகார் மனு அசாஆ 1. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை. சாட்சி குறுக்கு விசாரணை செய்யபடவில்லை.